தொகுதி-௫௯ :: பகுதி-௭, ௮ — Vol. 59 :: No. 7, 8

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1994
சோபகிருது—ஐப்பசி, கார்த்திகை
OCTOBER & NOVEMBER—1963

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 27—2—64)

உ

உள்ளுறை

1. முத்தொள்ளாயிரத்தில் உவமைநயம்
ஆர். வீரபத்திரன் 161

2. தொல்காப்பியம்-சொல்லதிகாரம்
நா. இராமையாபிள்ளை 165

3. எது இலக்கிய வரலாறு?
வை. கா. சிவப்பிரகாசம் 168

4. தூதனோ அனுமன்?
தி. வேலவன் 172

5. தமிழில் காப்பிய வளர்ச்சி
வை. தட்சிணாமூர்த்தி 185

"செந்தமிழ்"

நிர்வாக ஆசிரியர்
தமிழவேள்
திரு. பி. டி. இராசன் B. A. Bar-at-law

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருகூ Vol. 59	திருவள்ளுவர் ஆண்டு 1994 சோபகிருது—ஐப்பசி, கார்த் 1963 — OCT. & NOV.	பகுதி. எ, அ No. 7, 8

(சென்ற இதழ் தொடர்ச்சி)

முத்தொள்ளாயிரத்தில் உவமை நயம்

ஆர். வீரபத்திரன், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
பல்கலைக்கழகக் கல்லூரி,
திருவனந்தபுரம்,

கோள்தெங்கு சூழ்கூடல் கோமானைக் கூடஎன
வேட்டாங்குச் சென்றஎன் நெஞ்சு அறியாள்—கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை
வெறுங்கூடு காவல்கொண் டாள்.

குலையுடன் கூடிய தென்னைகளை சூழ்ந்துள்ள மதுராபுரிக் கிறைவனாகிய பாண்டியனை அணைவதற்கு விரும்பி எனது நெஞ்சம் என்னை விட்டுச் சென்றிருப்பதை உணராத தாய், கூட்டுக்குள் வாழ்ந்த சிறியபுள் பறந்துபோன பின்பும் அவ்வெறுங்கூட்டைக் காவல்புரியும் வேடனைப்போல என்வெற்றுடலைக் காவல்புரிகின்ருள் என்பது பாடலின் கருத்தாகும்.

இறுதியாக, சேரனைப் பொருளாகவுடைய பாடல் ஒன்றையும் காண்போம்.

உலக வாழ்விலே வறுமை மிகக்கொடியதாகும். 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்று ஔவையாரும் பாடியுள்ளார். வறுமையால் பசியுற்று நலியும்போது மனிதன் மானம், குலம், கல்வி முதலிய நற்பண்புகளைத் துறந்துவிடுகிறான். வறுமையைப் போக்கும் செல்வம் எவனிடமிருக்கிறதோ, அவன் ஈகைக் குணம் இல்லாதவனாயினும், அவன்முன் சென்று, "பல்லெல்லாம் தெரியக் காட்டிப் புருவரல் முகத்தில் தேக்கி" இரக்க முற்படுகிறான். ஆனால், மானவுணர்ச்சி உடையவர்களுக்கோ அவ்வாறு பிறரிடம் சென்று கையேந்தி நிற்க மனம் வருவதில்லை.

தன்மானமுடைய ஏழை ஒருவன் நல்குரவால் நலிவுற்றுக் கொடைக்குணம் வாய்ந்த செல்வந்தன் ஒருவனை அணுகிப் பொருள்பெற எண்ணுகிறான். அவ்வெண்ணத்துடன் அவன் செல்வனின் இல்லத்தை நோக்கிச் சிறிது தூரம் செல்கிறான். இதற்குள் அவனது மானவுணர்ச்சிமேலிட்டு அவனை மேலேபோகவொட்டாமல் தடுக்கிறது. ஆதலால், அவன் சென்றவழியே திரும்பிவிடுகிறான். சிறிது நேரத்திற்குப்பின் மீண்டும் அவன் தன் வறுமையின் கொடுமையை எண்ணுகிறான். செல்வந்தன் ஏதேனும் தந்துதவ மாட்டானா என்ற ஆசையில் பின்னரும் அவன் வீட்டைநோக்கி நடக்கிறான். இம்முறையும் மானவுணர்ச்சி அவனைத் தடுத்துவிடுகிறது. எனவே, அவன் மீண்டும் வந்துவிடுகிறான். நல்கூர்ந்தானின் இச்செயலை உவமையாக அமைத்து ஒரு நங்கை தன் அனுபவத்தை வெளியிடுகிறாள்.

சேர மன்னன் ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையும் அசைகின்ற மாலையையும் அணிந்து வீதியில் பவனிவருகின்றான். முதுக்குறைவெய்தி வீட்டிற்குள் வாழும் அந்நங்கை அக்காட்சியைக் காண விழைகின்றாள். கதவைத் திறந்துகொண்டு வெளியே நோக்க முயல்கிறாள். அதற்குள் அவளுக்கு நாணவுணர்ச்சி மேலிடுகிறது. "உலாவரும் ஓர் ஆண்மகனை, அதுவும் சேரகுலச் செம்மலை ஒரு பெண்பால் பார்த்து நிற்பதா! அம்மங்கைப் பருவம்

எய்திய மாதினுக்கு இது இழுக்கன்றோ? இதனால் நாண் அழியும்; பெண்மை சிதையும்”—இவ்வாறு எண்ணி அவள் திறந்த கதவை அடைத்துவிட்டுத் திரும்புகிறாள். அதன்பின்பும் அவள் மனம் அமைதியுறவில்லை. சேரனது உலாக்காட்சியைக் காண அது பெரிதும் விரைகிறது. கால்கள் விரைந்து கதவின் பக்கமாக வருகின்றன; கை கதவைத் திறக்கிறது. அடுத்த கணத்தில் மீண்டும் மானவுணர்ச்சி மேலோங்கி ஆசையை அடிப்படுத்தி விடுகிறது. ஆதலால், நங்கை பின்னரும் கதவை அடைத்து விட்டுத் திரும்புகிறாள். உலாக்காட்சியைக் காணும் ஆசையால் கதவைத் திறக்க அதன் அருகில் வருவதும், பின் நாணவுணர்ச்சி தடுப்பதால் அங்குநின்றும் மீண்டும் செல்வதுமான நங்கையின் செயல்களைப் பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் செல்லுதலும் பெயர்தலுமாகிய செயல்களோடு கவிஞன் உவமித்துக் கூறுவது சால இனிதாகும்.

ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன்—நாணிப்
பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார்போல
வரும்செல்லும் பேரும் என்நெஞ்சு

என்பது முற்கூறிய அரும்பொருளை உள்ளடக்கிய கவிதைப்பேழை யாகும்.

மேல் விவரித்தவைபோன்ற பொருட் சிறப்புடைய உவமைகள் முத்தொள்ளாயிரத்துள் இன்னும் பலவுள. சேர நாட்டிலுள்ள தடாகம் ஒன்றில் செவ்வாம்பல் மலர்கள் அந்திப் பொழுதில் ஏக காலத்தில் மலர்ந்து விரியும் காட்சியை வெள்ளம் தீப்பற்றி எரிவதாகப் புலவர் உவமிப்பது இறும்பூது விளைவிப்பதாகும். பாண்டிய நாட்டில் நந்துப் பூச்சிகளின் முட்டையும், புன்னையின் குவிந்த மொட்டும், கமுகம்பாளையும் மண்ணில் சிந்திக்கிடப்பன அந்நாட்

டில் மிகுதியாக விளையும் முத்துக்களை ஒத்துத் திகழ்கின்றனவாம். பாண்டியனை எதிர்த்துப் போர்புரிந்த மன்னர்களின் பொற்கிரீடங்கள் தரையில் விழ, அவற்றை அப்பாண்டியன் ஏறிவந்த குதிரைத் தன் காலால் உதைத்தலால் அதன் குளம்புகள் பொன்னின் மாற்றைத் தெரிவதற்கு உரைக்கும் உரைகள்போன்று காணப்பட்டது என்று கூறும்முறை மிக்க நயமுடையதாகும். கிள்ளியின் போர் யானை பகையரசனின் மதிற்கதவைத் தன் கோட்டால் குத்தித் தூக்கி நிமிர்ந்து நிற்கும் காட்சி பாய்விரித்துக் கட்டிய நாவாயை ஒத்திருப்பதாகக் கூறுவது கற்பார்க்குப் பேருவகை தருவதாகும்.

முத்தொள்ளாயிரத்தில் அடங்கிய பாடல்கள் ஒவ்வொன்றும் வடித்தெடுத்த செஞ்சொற்களாலாய இன்பக் கருவூலம் ஆம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற நியாயப்படி ஒருசில பாடல்களின் நயங்கள் இங்கு ஓரளவு விளக்கப்பட்டன. நூலின் நயம் முழுவதையும் வார்த்தைகளால் விளக்க முற்படுவது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் பிறிதோரிடத்தில் கூறியது போல ஆவின்பால் சுவையை நாழியால் அளந்துகாண முயல்வதை ஒக்கும். எனவே, அறிஞர்கள் அந்நூலைக்கற்று ஆராய்ந்து அதன் இன்பத்தில் திளைப்பார்களாக!

தொல்காப்பியம் - சொல்லதிகாரம்
சேனுவரையர் உரை

எளிமையாக்கம்:- வித்துவான்.

நா. இராமையாபிள்ளை, எம். ஏ.

சூத் 13. செப்பும் விஞவும் வழாஅல் ஓம்பல்

செப்பும்—செப்பினையும்(விடையினையும்;) விஞவும்-விஞவினையும்(கேள்வியினையும்;)வழாஅல்ஓம்பல்—வழுவாமற்போற்றுக.

வழாஅல் என்பது வழாமல் என்பதாகும். ஓம்பல் என்பது அல்லீற்று வியங்கோள் வினைமுற்று.

செப்பு, இறை, பதில், விடை என்பன ஒரு பொருள் குறித்த கிள்விகள்

விஞ, கேள்வி என்பன ஒரு பொருட் கிளவிகள்.

செப்பு என்பது விஞவிய பொருளை அறிவிப்பது. அது (1) செவ்வனிறை (2) இறைபயப்பது என இருவகைப் படும். செவ்வினிறை என்பது செவ்வியமுறையில் அதாவது நேராகப்பதில் கூறுவது. இறைபயப்பது என்பது செவ்விய முறையில் அதாவது நேராகப்பதில்கூறுவது.இறைபயப்பதுஎன்பதுசெவ்விய முறையில்லாமல் ஒருவழியாகப்பதில்கிடைக்கும்படிகூறுவது. செவ்வினிறை என்பது உயிர் எத்தன்மையது என்று விஞவியபோது, உணர்தல் தன்மையது என்பது. இறை பயப்பது என்பது உண்டியோ என்று விஞவிய போது, 'வயிறு வலித்தது' என்பது. வயிறு வலித்தது என்பது "உண்ணேன்" என்ற விடையைத்தந்ததாகலின் இறை பயப்பதாகும்.

"சாத்தா! கருவூர்க்குச்செல்லாயோ?" என்ருல், "பருநூல் பன்னிரு தொடி" என்று சொல்வது செப்புவழுவாம், "சொல் எப்பொருள் உணர்த்தும்?" என்று விஞவியபோது,

''சொல் ஒரு பொருளும் உணர்த்தாது'' என்று சொல்வதும் செப்புவழுவாம். வினய பொருளை வினவால் உணர்ந்து தான் குறித்த பொருளை உணர்த்துவது செப்பு.

கேள்வி:—வின இல்லாமலும் செப்பு நிகழும், எனவே வினய பொருளை என்பது வேண்டாம். அறிவுறுப்பது (தெரிவிப் பது) என்று மட்டும் இருந்தால் போதும் என்பது தடை.

விடை:— அப்படியானல் மாணக்கன் அறிய வேண்டுவன வற்றைத்தெரிவிக்கும் வினவும் செப்பாகும். அது பொருந்தாதல் லவா! கேட்ட கேள்விக்குவிடையளித்தலே செப்பு. அது உத்தரம் என்பதனேடு ஒரு பொருள் கிளவி, இக்காரணங்களால் ''வினய பொருளை அறிவுறுத்தல்'' என்பதே செப்புக்கு இலக்கணமாகும். ''குமரியாடி வந்தேன், சோறு தருக'' என வினவின்றி நிகழ்ந்த சொல் யாண்டு அடங்குமெனின், அறிய வேண்டியதை உணர்த் தாது ஒன்றனை அறிவித்து நிற்றலின் செப்பின்பாற்படும்.

செப்பு அறுவகை' (1) வின வெதிர்வினுதல், (2) ஏவல். (3) மறுத்தல், (4) உற்றதுரைத்தல். (5) உறுவது கூறல்' (6) உடம்படல். என உரையாசிரியர் கூறினர். அது பொருந் தாது.

மறுப்பு:—உயிர் எத்தன்மைத்து என்றபோது உணர்தல் தன்மைத்து என்றல் முதலாயின அவற்றுள் அடங்கா. மறுத்த லும் உடம்படலும் ஏவப்பட்டாரிடம் ஏற்படுவதோடு வினவப்பட் டாரிடமும் தோன்றும். எனவே அறுவகைப்படும் என்பது பிறர் மதமாகும்.

வின என்பது அறியலுறவு வெளிப்படுப்பது. அது (1)அறியான் வின (2) ஐயவின. (3) அறிபொருள் வின என மூவகைப்படும். அறியான் வின—உயிர் எத்தன்மைத்து என்பது

ஒரு வகையானும் அறியப்படாத பொருள் வினவப்படா. பொது வகையால் அறியப்பட்டுச்சிறப்பு வகையால் அறியப்படாமை நோக்கி அறியான் வினு ஆயிற்று.

ஐயவினு:—குற்றியோ மகனே தோன்றுகின்ற உரு என்பது. அறி பொருள்வினு– அறியப்பட்ட பொருளையே ஒரு பயன் நோக்கி அவ்வாய் பாட்டின் ஒன்ருல்(அறியான்வினு முறையிலோ ஐயவினு முறையிலோ) வினுவுவது. அதனுல் பயன், வேறு அறிதலும் அறிவுறுத்தலும் முதலாயின. கறக்கின்ற எருமை பாலோ சினையோ என்பது வினுவழு. ஒரு பொருள் காட்டி அதை நெடியதா குறியதா என்பதும் வினுவழு- (இருபொருள் காட்டி வினவலாம்.)

உரையாசிரியர் மூன்ருவதாகிய அறிபொருள்வினுவை மூன்ருக விரித்தார்.! 1. அறிவொப்புக்காண்டல். 2. அவன் அறிவு தான் காண்டல். 3. மெய்யவற்குக்காட்டல் என்பன. இந்த மூன்ருேடு அறியான்வினு, ஐயவினு இரண்டையும் கூட்டி வினு ஐந்து வகைப்படும் என்ருர்.

சேனுவரையர் கூறியபடி. செப்பு இருவகை. வினு மூவகை இவற்றுள் 1. செவ்வனிறை. 2. அறியான்வினு. 3. ஐயவினு மூன்றும் வழா நிலையின் பாற்படும். எனவே இவற்றை ''வழா அல் ஓம்பல்'' என்பதனுற் கொள்க. ஏனைய வழுவமைப்புழிக்காணப்படும்.

வினு வழீ இயினபோது அமையாதுஎன்ருர் உரையாசிரியர். அதுபோலியுரை. ஏனென்ருல் ''யாது எனவருஉம் வினுவின் கிளவி'' (சூ-32) என்றும் ''வன்புற வருஉம் வினுவுடை வினைச்சொல்'' (சூ-244) என்றும் ஆசிரியர் தொல்காப்பியரே கூறி வழு அமைக்கின்ருர்.

எது இலக்கிய வரலாறு?

வை. கா. சிவப்பிரகாசம்,
காட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

இலக்கியவரலாற்றுக்கல்வி ஆங்கிலத்தொடர்பினுல்தமிழில் வளர்ந்து வரும் அறிவுத்துறைகளிலொன்று. தளர் நடை பயிலுங் குழந்தைப்பருவத்திற்றான் இன்றுந்தமிழில் இலக்கிய வரலாறு காட்சியளிக்கிறது. ஐம்பது ஆண்டுகட்கு மேலாக இலக்கிய வரலாற்றுச்சிந்தனைகள் அலையலையாக மோதிவந்துஞ் சீறிய இலக்கிய வரலாறு தமிழில் வரையப்படவில்லை. தமிழிலக்கியப்பரப்பு முழுவதையும் ஆராயும் விரிந்த நூல் தோன்றவில்லையெனினும், சிற்சில நன்முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இருபதாம் நூற்றுண்டில் ஸ்புட்னிக்காலத்தில் வாழுந் தமிழ்மக்கள் திணை இலக்கியக்காலம், அறநூற்காலம், பக்தியியக்கக்காலம் போன்ற காலப்பிரிவுகளை அடைந்து அக்காலங்களில் வாழ்ந்த தமிழரின் வாழ்வு, எண்ணம், குறிக்கோள் என்பன எவ்வாறு இருந்தன, அவை உருவாக உதவிய சூழல்யாது, அவற்றின் ஆக்கத்திற்கு ஊறுபுரிந்த தடைகள்யாவை, அத்தடைகளை எவ்வாறு நீக்க முயன்றனர், அம்முயற்சியில் எத்துணை வெற்றியீட்டினர் என்பன போன்ற செய்திகளை அறிந்துகொள்ள இலக்கிய வரலாறு பேருதவி புரிகிறது.

இலக்கியம் இத்தகைய செய்திகளை உணர்த்துவதோடு ஆசிரியனின் உள்ளத்தின் எதிரொலியாகவுந்திகழ்கிறது. எனவே இலக்கிய வரலாறு காலத்தினூடாகப் பிரயாணஞ் செய்ய உதவுதல் போலப் பல்வேறு கோட்பாடுகளைப்போற்றும் பல் வகை உள்ளங்களினூடாகப்பிரயாணஞ்செய்யும் இன்பப்பெரும் பேற்

றையும் நல்கும் ஆற்றலுடையது.

ஒரு மொழியின் இலக்கிய வரலாறு அம்மொழியிலுள்ள இலக்கியங்கள் அவற்றின் ஆசிரியர்கள் பற்றிய செய்திகள்; அவ்விலக்கியங்களின் நிறைகள் குறைகள் பற்றிய ஆராய்ச்சி' இலக்கியக்கோட்பாடுகள், மரபுகள் பற்றிய விளக்கம் என்பவற்றை உரைக்கும் நூல் என்றொரு கருத்து நிலவுகின்றது. இத்தகைய கருத்து இலக்கிய வரலாற்றைப்பெரும்பாலுஞ் செய்திக்கோவையாக்கி விடுகின்றது.

இலக்கியம் ஓரினத்தின் உயிர்நிலை, பண்பாடு, குறிக்கோள் என்பவற்றின் வளர்ச்சியைச்சித்தரிக்கின்றது. ஆகவே இலக்கியத்திற் புதைந்து காணப்படும் ஓரினத்தின் பிறவிப்பேராற்றல், இனப்பண்பு என்பவற்றின் விளக்கம் வளர்ச்சிகளைப் புலப்படுத்துவதே இலக்கிய வரலாறு என்பதில் ஐயமில்லை.

நாட்டுவரலாறு செயற்றுறையில் ஓரினங்கண்ட சாதனைகளை உரைக்கின்றது. இலக்கிய வரலாறு சிந்தனைத்துறையில் ஓரினம் எய்திய உயர்வை இயம்புகின்றது. சிந்தனையில்லாச் செயல் பயனற்றது. செயலாக நிறைவு பெருத சிந்தனையாலும் பயனில்லை பொதுவாகச்சிந்தனையுஞ் செயலும் இணைந்தே இயலுகின்றன. ஆகவே நாட்டுவரலாறும் இலக்கியவரலாறும் நெருங்கிய தொடர்புடையனவாய் ஒன்றையொன்று பாதிக்க வல்லன வாய்த் திகழ்கின்றன.

காலந்தோறும் மக்கள் சிந்தனைகளும் செயல்களும் மாற்றமடைவதுண்டு. அவற்றின் காரணமாக அவர்தம் திறனும் இனப்பண்பும் வேறுபட்ட போக்குடையனவாகக் காட்சியளிக்கும் ஆகவே இலக்கிய வரலாற்ருசிரியன் இலக்கிய வளர்ச்சியை வரையுங்கால் சங்க காலம், களப்பிரர்காலம், பல்லவர் காலம்

என்ரூே. திணையிலக்கியகாலம் அறநூற்காலம், பக்தியியக்கக் காலம் என்ரூே பிறவாரூே பலகாலப் பிரிவுகளாகப்பகுத்து ஆராய் தல் வேண்டும். அத்தகைய பாகுபாடு செய்யுங்கால், குறித்த காலப்பகுதி யொன்றிற் பொது வியல்புகள் ஊடுருவிநிற்கும்பான் மையையும் அவற்றின் போக்கையும் அறிதல் வேண்டும். இப் பொது வியல்புகள் இனப்பண்பாகவும் காலப்பண்பாகவும் மிலிர் தலேயுந்தெளிதல் வேண்டும். சில இலக்கியங்கள் பொதுமையின் வேறுபடினும் அவை எவ்வாறு வேற்றுமையில் ஒற்றுமையுடைய னவாய்ப்பிணிப்புண்டு காட்சியளிக்கின்றன என்பதையும் ஆய்தல் வேண்டும்.

ஒரு காலப்பகுதியின் பொதுவியல்பு அதற்கு முற்பட்ட காலப்பகுதியின் இயல்பிலிருந்து எவ்வாறு முளேத்து வளரத் தொடங்கியது என்பதையும் கூர்ந்து நோக்கல் வேண்டும்.

டெயின் (Taine) என்பார் கருதுவது போல மக்கள் நெஞ்சப்பாங்கு, சூழல், காலக்கருத்து என்ற முப்பெருஞ்சக்தி களினுல் இலக்கியப்பரிணுமம் உருவாஞலும், பாரதி போன்ற ஆற்றல் மிக்க ஆசிரியர்கள் காலத்திற்கு அடிமைபாகாது-காலத் திற்கு இரையாகாது- புதியகொள்கைகளேப்பரப்பிக் காலத்தை வென்று புதிய யுகத்தை உருவாக்குதலேயும் இலக்கிய வரலாற் ருசிரியன் மதிப்பீடு செய்தல் வேண்டும். தனித்துவமும் (Individuality) மூலப்படைப்புத்திறனும் (Driginality(சான்ற இலக்கிய ஆசிரியன் காலத்தோடு தொடுத்த போரில் உற்ற இன்னல்கள் இத்தன்மைஎன, அவன் வெற்றியின் பெற்றி இன்னது விளேவுகள் இன்ன என்பவற்றையும் இலக்கிய வரலாற் ருசிரியன் ஆராய்தல் வேண்டும்.

ஒரு கால இலக்கியத்திற்கும் பிறிதொரு கால இலக்கியத் திற்கும் பொருள், நுவல் திறன், வடிவம் என்ற அம்சங்களில் ஒற்

றுமை வேற்றுமைகள் காணப்படும். அவ்வாறே ஒரு மொழி இலக்கியத்திற்கும் அக்காலத்தைச்சேர்ந்த வேற்று மொழி இலக்கியத்திற்கும் ஒற்றுமை வேற்றுமைகள் காணப்படும். இத்தகைய ஒற்றுமை வேற்றுமைகளுக்குக் காரணமான செல்வாக்குகள், சக்திகள் யாவை, அவற்ருற் பிறவிப் பேராற்றல் இனப்பண்புகள் எவ்வாறு பாதிக்கப்பட்டன என்பவற்றையும் இலக்கிய வரலாற்ருசிரியன் மதிப்பிடல்வேண்டும் இத்தகைய மதிப்பீட்டால் விழுமிய உண்மைகள்புலப்படலாம்.

இலக்கிய நடை காலத்தை ஊடுருவிப்பல்வேறு வகைகளிற் பல்வேறு காரணங்கட்காக மாற்றமடைந்து செல்லும். நடையஉருவாக்கிய ஆற்றல்கள் யாவை, அந்நடையின் கூறுகள் என்ன, ஆசிரியன் சிந்தனை, காலப்போக்கு, இனப்பண்பு ஆகியவற்றை உணர்த்துதலில் நடைபெறும் வெற்றி எத்தகையது என்பவற்றையும் இலக்கிய வரலாற்ருசிரியன் சீர்தூக்கல் வேண்டும்.

இலக்கியத்தை உருவாக்க ஆசிரியன் கடைபிடித்த செய்முறை அவனது இலக்கிய நுண்டிறனை விளக்கவல்லது. ஆகவே இலக்கிய வரலாற்ருசிரியன், ஓரிலக்கியம் எத்தகைய நிலைமைகளில் உருவாக்கப்பட்டது, அதனை ஆக்குங்கால் நேர்ந்த இன்னல்களை இலக்கியக்கலைஞன் எவ்வாறு வென்ருன், அவன் கருதிய விளைவுகளின் வெற்றி தோல்வி என்பவற்றை மதிப்பிட்டு இலக்கிய வரலாற்றில் அவைபெறும் இடத்தையும் ஆராய்தல் வேண்டும்.

தூதனோ அனுமன்?

—*●*—

தி. வேலவன்,
தமிழ் ஆய்வுத் துறை,
கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

விரிமயிர் சூழ் தலை; புகை மூச்சு உமிழ் வாய்: திறல் மிகு தேவர் படைவிடு வடுபடுதோள்: மகளிர் உகிர் தெரி குறி நிறை அகலம்: தென் திசை வட அனல் என ஒளிர் முடி: இருள் பெரு செவ்வான் எனத் தகும் உரு: இவை அமை மூவுலகு ஆளும் வேந்தன், திசை பல காக்கும் அரவ ரசு என பெரு நில மிசை நிலை பெறும் மேரு என, இருடி யர் சூழப் பல்லியங் கறங்க பாட்டுங் கூத்தும் பரந்து ஓங்க எண்டிசை காக்கும் திண்டிறல் கட்டிலில் வன்றிறல் தோன்ற அமர்ந்தனன்.

வலி கொண்டு வனம் அழித்த வளியின் சேய்: கிங்க ரர் சம்புமாலி ஐம்படைத் தலைவர் அக்கன் எனும் இவர் கொன்ற குரங்குச் சீயம்: சிறுவலிக் குரங்கின் ஆற்றல் மாற் ருது பெருவலி அரக்கர் வீழ்வதோ என எழுந்த இந்திர சித்த னின் மந்திர பாணத்தால் பிணி பட்டு, வியப்பும் களிப்பும் நிறைந்து வல்லியல் அரக்கர் சூழ இலங்கையர் கோன் அவை புகுந்தனன்.

உற்ற சினம் மேலெழப் பற்று கனல் கண்களால் இரா வணன் அனுமனை நோக்கினன். ஆற்றலும் விழைவும் தோன் றக் கேட்டனன்.

''நாமமும் உருவமும் கரந்து நண்ணினுய், யாவன் நீ. 1 என்னை இங்கு எய்து காரணம்?''2

---

1. சுந்தரகாண்டம்—1116.
2. ,, —1119.

''அல்லியங் கமலமே அனையே செங்கணோர்
வில்லிதன் தூதன் யான்'' 3

எண்ணம்

இலங்கை நகர் மனை எலாம் நோக்கிய அனுமன் மூவுலகு ஆள்வான் இளவல் மனை புகுந்தான். நம்பியின் ஆருயிர் நங்கையைக் கொணர்ந்த அரக்கர்கோ 4 இவனே எனக் கனன்றான். கருத்துள் நினைந்தான். தலைபத்து உடையனல்லன் தரணி ஆள்வான் இவனல்லன் என எண்ணித் தெளிந்தான். அகன்றான்.

மண்டோதரியின் மனைபுகுந்து பஞ்சனையில்மங்கை நல்லாள் துயிலக்கண்டான். துணுக்குற்றனன். துயருழந்தனன். கற்பு நீங்கிய கனங்குழை இவளெனிற் காகுத்தன் புகழொடும் பொற்பும் யானும்இவ் இலங்கையும் அரக்கரும்பொன்றுதும்5 இன்றுஎன்றான் அவள் வேறு, சீதைவேறு என்பதை உணர்ந்தான். சீதையின் செம்மை நினைந்தான். அவள் உறுப்பு அடையாளம் கருதினான். சீதை அல்லள் அவள் எனத் தெளிந்தான்.

நூற் பெருங்கடல் நுணுகி அறிந்தவன், பாற் கடல் மீது பாம்பணைப் பள்ளியில் மால் வதிவது போலத் துயிலக் 6. கண்டான் அனுமன், நிலம் துடித்து. நெடுவரை பொடித்தது. ஊழ்முறை உணர்ந்தான், மாயோன் பெற்றக் குறள் வடிவினும் குன்றிய வடிவுடன் நின்றான். அவன் கண்கள் காலச் செந்தீ விண்டன.

---

3. சுந்தரகாண்டம்—1120.
4. ,, — 225.
5. ,, — 295.
6. ,, — 301

"வாளாற்று கண்ணுளை வஞ்சித்தான். மணிமுடி என்
தாளாற்றலால் இடித்துத் தலைபத்துந் தகர்த்து என்றன்
ஆளாற்றல் காட்டேனேல் அடியேனுய் முடியேனே,"2

என வெகுண்டான். எயிறு கடித்தான். இருகையும் பிசைந் தான். நின்று நினைந்தான். "நேமியோன் பணி யன்ருல் ஒன் ருக்கி ஒன்றிழைத்தல் உணர்வுடைமைக் குரித்தன்ருல் பின் தூக் கின் இது சாலப் பிழை யாகும் எனப் பெயர்ந்தான்." 3.

கள்ளுறை மலர்ச்சோலை அயலொன்று கண்ணுற்று உட் புகுந்தான். விரிமழைக் குலங் கிழித்து ஒளிரும் மின்னெனக், கருநிறத்து அரக்கியர் நடுவண் சீதையைக் கண்டான். கருத் துள் கொண்டான். உவகைத்தேன் உண்டான். தன் தேவி யைத் தேடிக் கண்ட களிப்பில் ஆடினன். பாடினன். ஆண்டும் ஈண்டும் பாய்ந்து ஓடினன். மரக்கிளையுள் உலவினன்.

எறுழ்வலி அரக்கர் ஏந்தல் தன் நெஞ்சு புக்க நங்கையின் ஆசையால் உயிர் ஆசழிய மலர் வனம் புக்கனன், அஞ்சனை சிறுவன் மறைந்து இருந்தனன் நெஞ்சத்து உணர் வெல்லாம் வஞ்சிமுன் கெஞ்சிக் கெஞ்சிக் காட்டினன், அஞ்சுதல் நீங்கிய அஞ்சன வண்ணன் பெண்டு அவன் உள்ளம் தைக்க, தக்கது இது: தகவிலது இது எனச் சான்று காட்டி இடித்துரைப்பார் இலர்; நீயே எண்ணி நின்னை முடிக்குங்கால் ஆவது என்? நீ முன்னிய முடிவு அன்றிப் பிறிதுளதோ? எனக்கடிந்துரைத் தாள்.

முகில் படு மின்னென கண்கள் கனல, குன்று அதிரக்குரல் எழுப்பி 'இவளைப்பிளந்து தின்பென்' என்று உடன்றனன். கிளை யுள் குன்றிய அனுமன் குமுறினன். அதுசொன்ன நீசனின் கை

2. ,, —314
3. ,, —316

தன் தேவியைத் தொடுமுன்னம் அவனைத் துகைத்து உழக்கிப் பின்னை நின்றது செய்ய விழைந்தனன்.

இராவணன் தலைபத்தும் வீழ்த்தி, இலங்கையைக் கடலுள் ஆழ்த்திச் சீதையைச் சுமந்து இனிது மீள் 1 வன் இராமன்பால் எனக்கருதினன்.

நம்பியின் கணையாழியைச் சீதைபால் சேர்த்த பின்பும், அவளைக்கொண்டு அகலக் கருதினன் அனுமன். அது உணர்ந்த நல்லாள் அவன் எண்ணம் தக்கது அன்று என உணர்த்தினள். அஞ்சனை சிறுவனும் தன்பிழை கண்டான்.

ஆயினும், சூடையின் மாமணி பெற்று இராமன்பால் செலற்கு விடை பெற்ற அனுமன், பற்றலறை எற்றி, எயின் மூதூர் அழித்து, மான்விழி மங்கையை மானவன் கழலின் வைப் பென், இன்றெனில் யாங்கன் அவர் அடிமை ஆவென் எனக் கருதி நின்றனன்.

அவ்விழைவு முற்றியது. வலியபாணம் பிணிக்க வல்லரக் கர் அவை நடந்தான், இராவணனைக் கண்டான், பிணித்த பா ணம் சிந்தி, அணித்தமைந்த நஞ்சனைய வஞ்சத்தான் தலை சிந்து வென் என முனைந்தான். பின்பு தணிந்தான். அவனைக் கோறலும் எளிதன்று அவன் தன்னைக் கோறலும் எளிதன்று. காலம் கழியும், என நினைவு மாறினன்.

முன்முனைவதும், பின் முடங்குவதும் அவன் எண்ணத்தின் இயல்பாய் உளது. முன் எண்ணம் ஒன்று. பின்எண்ணம் வேறு. அது கலங்கித் தெளிகின்றது. அலைந்து நிலைக்கிறது. உணர்வு முந்துகின்றது. அறிவு அண்டுகின்றது. அமைதி முகிழ்க்கின்றது. தெளிவு மலர் கின்றது.

---

1. சுந்தரகாண்டம்— 469.

ஆற்றல்

வான் எழுந்து, மை நாக மலையைத் தன் மார்பால் புரட்டினுன். சுரசையின் பேழ்வாய் ஏலா பேர் உருவு கொண்டான். அதட்டிய அங்கார தாரையின் வாய்புக்கு வயிறு கிழித்துக் குடற் கைக்கொண்டு வான் எழுந்தான். வெகுண்டு எழும் வெங்கனல் அன்ன இலங்கை மாதேவியை அடித்து வீழ்த்தினுன். கதிரேகா அரக்கர் கடி மதில் கடந்தான். கடக்க இயலாப் பேர் அகழியும் இஞ்சியும் கடந்தான். வன மழிக்க வந்தெதிர்ந்த வீரர் தமை வீழ்த்தினுன். இந்திர சித்தனையும் மயக்கினுன்

வாலில் அனலிட்ட அரக்கரை வீழ்த்தி, வான் எழுந்து பொன்னகர் மனை தொறும் அனலிட்டு ஏவிய இராமன் காண வான் வழி ஏகினன். ஆற்றல் வல்லோரெல்லாம் ஆற்ருது போயினர் அவன்முன். அனுமன், மாயோன் பெற்ற குறு வடிவிலும் குறுகிய வடிவும், வான் அளந்த பேர் உருவும் பெற்று இயங்கும் ஆற்றலன்: வெந்திறல் அறக்கியரும் துயிலுள் வீழ மந்திரம் கூறும் வல்லாளன்: அரக்கரும் அழிக்க இயலா ஆண்மையன். கலுலன் அன்னவன். குரக்குச்சியம். ஒப்பும் உயர்வும் இலாதது அவன் ஆற்றல் இராமன் வில் விடு அம்பு அனைய விறலன் அவன்.

விழைவு

அணி நகருள் துயிலும் மண்டோதரியைக் கண்டு நினைவு மயங்கிய போழ்தும்: கும்பகர்ணனும், இராவணனும் துயிலக் கண்டு கனன்ற போழ்தும், மாநகரும் நாடும் அரக்கரும் வீழ்த்த விழைகின்றது 1 அனுமன் நெஞ்சம். இராவணன் சுற்றம் காண் தொறும் கனல் பொங்க வெகுண்டெழுகின்றனன் அவன்.

---

1. சுந்தரகாண்டம்— 295.

,, — 301.

,, — 314.

மனைதோறும் திருமகனனைய நங்கையைத் தேடிக்காணாது ஏங்கிய திறலோன் மாடுநின்ற மணி மலர்ச்சோலை மருவ எண்ணினன். சோலையுள் தேவி இன்றெனில் இலங்கையும் மலையும் வீழ்த்தித்தானும் 1 வீழல் தருமெனக் கொண்டான்.

கண்ட சீதைபால் கணையாழி கொடுத்து சூடாமணி பெற்று மீள நின்றவன் மனம் சுழன்றது. விழைவு வேறு ஆயது.

''இப்பொழிலினைக் கடிது இறுக்குவென் இறுத்தால்
அப்பெரிய பூசல்செவி சார்தலும் அரக்கர்
வெப்புறு சினத்தர் எதிர் மேல் வருவர் வந்தால் 2
துப்புற முறுக்கி உயிர் உண்பல் இது சூதால்,''
''வெந்திறல் அரக்கனும் விலக்கரு வலத்தான்
முந்துமெனில் அன்னவன் முடித்தலை முசித்து என்
சிந்தையுறு வெந்துயர் தவிர்த்தினிது செல்வேன்''3

இவ்விழைவு முற்றியது. பொழிலை இறுத்தான். பேர் அரக்கர் பலரை அழித்தான். ஆயின் இறுதியில் பிணியுண்டு பிழை செய்தான் போல் அரக்கர் அவை நடந்தான். இனிது செல்லான் ஆயினன்.

பல் செல்வப் பெருக்கமும், அரக்கர் அணிநகரம் பாங்கும் கண்ட அனுமன் விழைவு அவற்றை அழிக்கவே முந்துகின்றது. அழிவு அவன் உணர்வில் ஊடாடுகின்றது. அரக்கர் குலத்துக்கே நஞ்சாக நிற்கின்றது அவன் விழைவு.

அறிவு

இயக்கர் நகர் இருந்த சீதை தன் துயர்க் கடலின் கரை

1. சுந்தரகாண்டம்— 330.
2. ,, — 700.
3. ,, — 701.

காண இறப்பையே துணைகொள்ள முயன்றாள். தேடிவந்த நாயகன் தேவி கூடிநின்ற ஆவி இனி விடுவாளோ என அனுமன் கலங்கும் வண்ணம் நீள் குழலே மாள் கயிறுக் கொள்ளும் வேளை, அனுமன் மெய் துணுக்குற்றது. நாயகன் தேவியைக் காத்தல் வேண்டும். மெய் தொட்டுத் தடுப்பெனோ? நில்லென்று சொல்வெனோ? யாது செய்குவென்? கலக்கம் அவனை உலுக்கியது! அவள் மெய்தூண்டக் கூசினன்! காக்கும் வழி வேறு இன்மை கண்டான். மண்மிதித்தனன். நாவும் நவின்றது. கால்கள் ஓடின. கை தொழுதனன். ''அண்டர் நாயகன் அருட் தூதன் யான்'' என்று அறைந்தனன். நங்கை நின்றனள். ஐயுறவு கொண்டனள். அஃதுஉணர்ந்த அனுமன் தன் வரலாறு கூறினன். இராமன் வடிவு கூறினன். நொந்தவள் நெஞ்சம் மகிழ்ந்தது. உயர்ந்தனெனன் யான் என்று இருந்தாள்.

அனுமன் வரவெண்ணி அலமந்து இருந்தது இராமன் சுற்றம். சீதையை நாடிய இராமன் உள்ளம் குலைந்து கிடந்தது. தேற்றுவார் பலர் இருந்தும் ஆற்றாமல் வாடினன். அனுமன் சென்றடைந்தான். செய்தி கேட்க யாவரும் விரும்பினர் கண்டதை யாவும் யாங்கன் கூறுவன்? எதனை எவ்வழிச்சாற்றுவன்? அவர் கருத்துக்கொள்ள எதனை உணர்த்துவன்? தன் வரவு பார்த்திருப்பார்க்குத் தன் சொல்லே நஞ்சாயும், அமுதாயும் அமையும் என்பதுணர்ந்தவன், எவ்வழிக்காட்டுவன் தன் உள்ளுறை செய்தி எல்லாம்? முன்பு இராமனின் அடிமை அனுமன், இன்று கற்பெனும் தெய்வத்தின் அடியான், அத்தெய்வத்தின் திருப்பெயரே நெஞ்சும் நினைவும் கலந்து நின்றது.

இராமனைக்கண்ட அனுமன் கைகள் தலைமேல் குவிந்தன ஆயின் அவனை வணங்கில. தென்திசை நோக்கி வணங்கினன். இலங்கை நகர் நோக்கித் தொழுதனன், ''தையலை நோக்கிய தலை

யன் கையினன், வையந்தழீஇ நெடி திறைஞ்சி வைகினன்,''1 வாய் கூருச்சேதி எல்லாம் அவன் செயல் கூறியது. உணர்த்த இயலாதன எல்லாம் ஒருங்குணர்த்தினன். ஐயனும், தன் நெஞ்சு நிறை செல்வியும் வலியள்: அனுமன் அவளைக்கண்டதும் உண்டு அவள் கற்பும் நன்று எனக் குறிப்பினல் உணர்ந்து கொண் டான்.

''கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்'' 2 என்ற அனுமன் சொல், இராமனின் உள்ளமும் நெஞ்சமும் வின வியவெல்லாம் கொடுக்கும் சொல்லாகி, உயிர்காக்கும் மருந் தாகி நின்றது.

உணர்வும் இடமும் கருதிக் கூறும் திறல் பெற்றவன் அனு மன். அது பற்றியே இராமன் இவனைச் ''சொல்லின் செல் வன்'' 3 என்றனன் போலும், பிறர் உணர்வெல்லாம் குறிப்பால் உணரும் ஆற்றலன் அவன். அது கருதியே புலவனும் அவனை ''அறிவை ஒத்தவன்''4 என்றுரைத்தார்.

எண்ணமும் செயலும்

எண்ணம் செயலாக முற்றும். செயலின் அடிப்படை எண் ணம். எண்ணம் உள்ளத்து அனையது. அறிவும் பண்பும் ஆற்றலும் பயிற்சியும் கோட்பாடும் பிறவும் அவ்எண்ணத்தின் அடிப்படை. அடிப்படையின் இயல்பைப்பொறுத்தது எண்ணத்தில் இயல்பு. அதனைப்பொறுத்தது செயலின் இயல்பு. ஆகலின், செயலின் திட் பம் ஏனைய திறன்களின் திட்பத்தைப் பொறுத்தது ஆகும்.

இராமனுக்கு அடிமைத் தொழில் பூண்ட அனுமன், சீதை

1. சுந்தரகாண்டம். 1305.
2. ,, 1307.
3. கிட்கிந்தாகாண்டம்—63.
4. சுந்தரகாண்டம். —930.

யைத் தேடி இலங்கை சென்று அவளைக்கண்டு மீளவேண்டியவன். ஆயின் கொள்வினை முற்றுவதன்றிப் பிறவினைகளிலும் அவன் ஈடு படுகின்றனன். அது ஒருவினையால் மறுவினையும் ஆக்கிக்கொள்ளும் முறையாக இருக்கலாம். ஆயின் அவனே கொள்வினை விடுத்துப் பிற நினையலும் பிழை எனக் 1 கொள்கின்றனன். நீக்குகின்றனன். அவ்வுணர்வுடையான் வினைமுற்றி மீளநிற்கும் வேளையில் பொழி லிறுக்க நினைக்கின்றனன். ஏன்? ஆற்றல் காட்டவோ? தன் வரவு சாற்றவோ? ......அன்று? சூதால் அரக்கரை அழிக்குந்நெறி அதுவாகும் எனக்கருதியே முனைகின்றான். மேலும், அரக்கர்க்கு அழிவுசெய்யவே விழைகின்றனன். அதற்கு அவன் எந்நெறியை யும் கொள்ளவிழைகுவன். இன்றெனில் வலியும் வரமும் மிக்கவன் இவண் சூது எண்ணல் வேண்டற்பாலதோ?

அவன் எண்ணிய சூது குன்றியது. இனிது மீள இயலாதா னாய் பிணியட்டான். முறையும் தகுதியும் பிறழாமல் ஆற்றல்காட்டி வந்தெதிர்ந்தாரைஎலாம் வீழ்த்தியவன் அனுமன். முறைவழிப் படும் அனுமன் அரக்கர்கோமானை அழிக்க விழைவது தக்கது என லாம். ஆயினும், அது அவன்கொண்ட பணி அன்று. அவனே, அரக்கர்கோன்மட்டுமன்று, அவன் சுற்றமும் கொற்றமும் அழியக் காணும் ஆர்வலனாய்உளன். முறைபடு அவன் நெஞ்சம் முரண் படுகின்றது.

சிக்கல்

சீதையைத் தேடும் வினைமேற்கொண்ட அனுமன் நெஞ்சம் இலங்கையின் வளனும், அரக்கர் வாழ்வும் கண்டு வியந்து: வெகுண்டது: கனன்றது. இன்றேல் அழிவெண்ணம் முன்நின்று

---

1. சுந்தரகாண்டம்— 316.

அவன் செயலை மாற்றி இராது.

கொள்வினை முற்றி மீளவேண்டிய அனுமன் உள்ளத்தில் மாற்றார்க்குக் கேடு சூழும் எண்ணம் முகிழ்கின்றது. வனமழித்து வல்லரக்கர் உயிர் கொண்டுச் சொல்லொணாத ஆற்றல் பொன்ற வலிய பாணத்தால் பிணிப்புண்டான். அரக்கர் புடை சூழ இராவணன் அவை செல்லும் அனுமன் இராவணன் சுற்றமும் பெற்றியும் மனமும் பிறவும் அறியலாம் எனக்கருதினன். 1 மேலும் இராவணன் உள்ளத்தில் நீதியும் நிறுவி, எஞ்சிய பிறவும் அழித்துப்பையப் போதல் தன்வினை எனக் கருதி 2 நடந்தனன்.

உள்ளம் சுழன்றது. பிழைபடுவினையும் கொள் வினையும் கருதிச் சுழன்றான். ''அமர்த்தொழில் அழகன்று அருந், தூதனாந் தன்மை தூய் தென்று உன்னினன்'' இராவணன் முன்னும் அவ்வாறு சாற்றினன்.

அவன் சாற்றியது சான்றதோ? தன்னைத் தூதன் என்று மொழியும் தகுதியாங்கன் பெற்றனன்? இராமனின் அடிமை: அங்கதனுக்கு ஏவல் கூவல் பணி செய்வோன்: தன்னையவன் தூதன் எனக் கூறற்குக் காரணம் என்ன?

விடுத்த இராமன் இராவணனைக்கண்டு மொழிய யாதும் சாற்றிஇலன். சீதையைத் தேடி வரவே விடுத்தான். வந்தவினை சீதையைத் தேடிவரல். அதனை விடுத்துத் தன்னை இராகவன் தூதன் என அவன் சாற்றியது சாலுமோ? பகையர் புலத்துள் அறியாது புகுந்து, அவர்க்கு ஊறு பலவும் விளைத்தான். தன் கொள்வினை வினையன்றிப் பிறவினை செய்யல் பிழை என்று கருதினான். ஆயின் உணர்வு அவனை வழிநடத்த பொழிலிறுக்கத்

---

1. சுந்தரகாண்டம்— 1068.
2. ,, — 1070

துணிந்தான். அன்றியும் சூது நினைந்தனன்.

ஆக அவன் கொண்ட நெறியும் விழைவும் முறை பிறழ்ந்தன வாக அமைய, அப்பிறழ்வு அவன் நெஞ்சத்தை உறுத்தி இறுக்கும்; அசையா நெஞ்சமும் அலைந்திருக்கும். தன் பிழைகட்கெல்லாம் அரக்கர் பெருங்கேடு சூட்டுவர் என்னும் கலக்கம் முகிழ்த்திருக்கும். இன்றெனில் தன் கொள்வினையே சாற்றி இருக்கலாம் அன்றோ?

அன்றியும் அரக்கர் பண்பும் முறையும் அவன் அறிந்திருந்தனன். ஆகலின் தான் செய்த பெருங்கேட்டிற்கு உரிய பெரும் தண்டனை பெறுது செல்வழி எண்ணினன்: இன்றெனில் சாவுக்கு அஞ்சியவனுப் விடை இறுத்திருக்கல் வேண்டாம். சீதை கொடுத்தசாகா வரத்தையும் மறந்திருக்கல் வேண்டாம். இவை அனைத்தும் அவன் பண்பில் குறை சுட்டும்.

முரண்,

தூதனெனத் தன்னைச் சுட்டிய அனுமனை இராவணன் மீண்டும் வினவினன். இநம்புரத்தினுள் தூதனுப் புகுந்த பின் அரக்கரைக் கொன்றதற்குக் காரணம் கேட்டனன். ‘‘காட்டு வாரின் மைபாற் கடி காவினை வாட்டினேன் என்னைக் கொலற்கு வந்தார்களை வீட்டினேன் பின்னும் மென்மையினுல் உந்தன் மாட்டு வந்தது காணும் மதியினுல்—’’ இது அனுமன் விடை, ஒலி எழுப்பி வருமரக்கர் அனைவரையும், அழிக்கக் கொண்ட சூதாக வனமளித்த அனுமன் 1 கூறிய விடை இது. அவன் முன்னிய வினை ஒன்று. கூறிய விடை வேறு.

ஏன் அவ்வாறு கூறினன் அனுமன்? மெய் கூறவேண்டியவன் பிறற்கு அந்நெறி சாற்ற எண்ணியவன் பிறழ்ந்தது ஏன்?

1. சுந்தரகாண்டம்— 700

அச்சமோ? மென்மையோ? தடுமாற்றமோ? ஏன் அவன் அவ்வாறு கூறினன்.

அரக்கரை அழிக்க எண்ணியவன் அவர் கைப் படுவோம் என்பதை கருதினுன் அலன். முறையும் பிழையும் அவன் நெஞ்சத்துள் எழுந்தது. உணர்வு பிழையின் பாலும், அறிவு முறையின் பாலும் அவன் செயலை ஈர்த்தன. பிழைபட்ட நெஞ்சம் அவன் ஆற்றலை மாய்த்தது. அப்பிழையே பாணமாய் அவனைப் பிணித்தது. அவன் உள்ளத்தில் அச்சத்தை ஊட்டியது. உய்யும் வழிக்குப் பிழைபேசவும் தூண்டியது. இன்றெனில் அவன் சொல்லும் நினைவும் முரண்பட்டிருத்தல் வேண்டாம். மெய்சாற்ற முன் வந்திருக்கலாம். சாகா வரம் பெற்றவன் ஆற்றல் சால நின்றிருக்கலாம்.

தன் பிழைக்கு உரிய தண்டனையாய் சாவைத் தனக்களிப்பர் என்றஞ்சித் தூதனுய் உரைப்பது உய்யும் வழி என்று கொண்டனன் எனலாம். அது அவன் கூர்த்த அறிவைப் புலப்படுத்தும்: அவன் சொன்வன்மை தோற்றும் மெய்.

இன்றெனில் இராவணன் சீற்றம் மாற்றவல்ல வீடணனை அனுமன் அரக்கர் கோன் அவையில் பெற்றிருக்க இயலுமோ? தூதரைக் கொன்றவர் யாவரும் இலர்: தூதரைக் கோறல் முறையன்று. நகை தருவது: இழுக்கு என வீடணன் சாற்ற இயலுமோ? அனுமன் தானும் உய்ய இயலுமோ?

முறை எண்ணி அரக்கர்கோன் அனுமன் வாலில் தீயிட்டு விரட்டக் கூறினன். தூதனுய் தன்னைச் சுட்டியவனே, அந்நகருக்குத் தீயிட்டு அகன்றுன். அது தூது சொன்னவன்செயல். வாலில் அரக்கர் வைத்த தீயன்றே அவர் நகரைச்சுட்டது என ஐயம் தோன்றும். இயல்பு.

அனல் எனக் கனலும் கண்ணன் தன் அரும் தங்கை, சூர்ப்பனகைக்கு இராமனும் இலக்குவனும் செய்தது கருதியே

அனுமனுக்கும் வாலில் தீயிட்டு விடுக்கக் கூறினன். இன்றெனில் கொன்றிருப்பாரன்றோ?

நாடகப் பண்பு மிக்கது இராமகதை கதைமாந்தரின் இயல் புகள் அவர் சொல்லாலும் செயலாலும் புலப்படும். அவ்விரு நெறியிலும் புலப்படாதுளதாயின், புலவன் புலப்படுத்த முன் வருகுவன். இங்கு உறுப்பினர் செயலும் சொல்லும் பண்பினைப் புலப்படுத்த வல்லன வாயுள. அன்றியும் புலவனும் அடை மொழிகளால் அவர் பண்பு கூறுகின்றனன். பல இடங்களில் உறுப்பினர் பண்பு அவர் சொல்லாலும் செயலாலுமே நன்கு விளங்குகின்றது. அதைக்கொண்டு பண்பினை விளக்குதல் வலி யுடைத் தாயுளது.

சீதையைத் தேடிவந்தவன் அனுமன். அவளுக்கு அவன் அருட் தூதன். வென்றியான் அடியனாய் வந்தவன், தன்னையும் அரக்கர் அவையுள் வென்றியான் அடியன்: இராகவன் சேவ கன் எனச் சாற்றி இருத்தலே ஏற்புடைத்ததாய் அமையும். அவன் பண்பினை விளக்கிநிற்கும்.

ஆயின் அவன் உள்ளத்து எழுந்த சுழல் அவனை இரண்டுபடுத்தி விட்டது. நெஞ்சம் சுழன்றது. அச்சம் அண்டியது. நாயகனும் தேவியும் தன் செயல் போற்றிக் காக்கும் வலியின்மை கண்டு கருத்துள் 'தூதனும் தன்மை' கொண் டான்

உயிர் பேணத் தூதன் என்றான். அது அவன் பண்பு பேணும் சொல்லாகுமோ? இராகவனின் சேவகன், அன்றித் தூதனோ அனுமன்?

(தொடரும்)

தமிழில் காப்பிய வளர்ச்சி

வை. தட்சிணாமூர்த்தி,
எம். ஏ,
ஸ்ரீரங்கம்.

காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்:—

இலக்கியக்கலையின் முதிர்ந்த நிலையே காப்பியம். அத்தை பாட்டிக்கதைகளாக வாய்மொழியில் முளைக்கும் புனைந்துரையான கற்பனை, தனிப்பாடல் நிலையைக்கடந்து பொருட்பாகுபாட்டு நிலையில் முகிழ்க்கும் நெடும் பாட்டு நிலையை அடைந்தது. அந்நெடும் பாட்டுக்கள் பலவற்றின் முறையான தொகுப்பே காப்பியமாகிறது. ஒரே பொருளைப்பற்றித் தொடர்பாகக் குற்றமின்றி ஆக்கப்படும் தொடர்நிலைச் செய்யுளையே தமிழில் 'பொருள் தொடர்நிலைச் செய்யுள்' என அழைத்தனர். காப்பியம் என்ற சொல்லுக்கு நேர் தமிழ்ச்சொல் பொருள் தொடர் நிலைச்செய்யுள் என்பதே என்று அறிஞர் துணிவர். தமிழில் இன்று நாம்காணும் நீண்ட தனிப்பாடல் 782 அடிகளையுடைய 'மதுரைக்காஞ்சியே.' அதை அடுத்து அதைப்போன்ற நெடிய அடிகளைக்கொண்ட பாடல்கள் பலவற்றைக்கொண்ட நீண்ட பொருள் தொடர்நிலைச்செய்யுளாகவே நமது முதல் தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரம் முகிழ்த்தது.

பிற்கால இலக்கண நூல்களாகிய தண்டியலங்காரம், வெண்பாப்பாட்டியல் போன்றவற்றில் காப்பியத்திற்கான இலக்கணம் கூறப்பட்டது போன்று தொல்காப்பியத்தின் இலக்கணம் தனியே தொகுத்துக்கூறப்படவில்லை. அவ்வாறு தொல்காபியர் தனியே கூறவில்லையாயினும் காப்பியத்துள்ளே வருவதான எண் வகை வனப்புக்களின் இலக்கணங்களைக்கூறியுள்ளார். சிலப்பதி காரத்துக்கு முந்தியகாப்பியம் நமக்குக்கிடைக்கவில்லையாயினும்,

தொல்காப்பியத்துக்குப் பின்னர் தகடூர்யாத்திரை, இராமாயணம், பாரதம் போன்ற பண்டைக்காப்பியங்களைப்பெயரளவில் அறிகிறோம்.

காப்பிய இலக்கணம்:

கிரேக்கப்பேரறிஞர் அரிஸ்டாட்டில் அவர்கள்காப்பியநெறியைப்பற்றி பெரிய நூல்ஒன்று எழுதியுள்ளார்கள். கிரேக்கமொழியில் மட்டும் மின்றி பிற எல்லாமெழிகளுள்ளும்ஏற்பட்டுள்ள முதற்காலக்காப்பியங்கள் மக்களிடையேசெல்வாக்குப்பெற்றிருந்தசமய புராணக்கதைகளையே தழுவியனவாகத்திகழ்கின்றன. ஹோமரின் ஈலியட், மில்டனின் சுவர்க்கநீக்கம் ஆகியவை மேற்கண்ட வகையினைச் சேர்ந்தவையே. சிறப்புக்குரிய கருத்தைக்கவரும் உயர் குறிக்கோளைத்தாங்கி, இனிய பெருமித நடையில் வெளிவரும் தொடர்நிலைச்செய்யுளையே காப்பியம் என்பது கிரேக்கர் கொள்கை. வாழ்க்கைத்தத்துவமாய ஆழ்ந்த பொருளைக்கூற வேண்டும் என்பதே இதன் கருத்து. இதனையே தமிழர் அறம், பொருள், இன்பம், வீடென்ற நான்கில் அடக்கினர் காப்பியங்களைப்பெருங்காப்பியம் எனவும், சிறுகாப்பியம் எனவும் பிரிக்கும் மரபு உளது. நான்கு உறுதிப்பொருள்களில் ஏதேனும் ஒன்றைக் கூருது விடுபடின் அக்காப்பியம் பெருங்காப்பியம்ஆகாது. திறமறிந்து நான்கை நவில்வதே பெருங்காப்பியம். பிற்கால இலக்கண நூல்கள் காப்பியங்கள், ''வாழ்த்துதல், தெய்வம் வணங்குதல், வருபொருள் உரைத்தல், நிகரற்ற தலைவனையுடைத்தாதல் ஆயவற்ரேடு மலை, கடல், நாடு, நகர், அறுவகைப்பருவம், இருசுடர்த்தோற்றம், இன்னேரன்ன புனைவுகொண்டு மணவிழா, மு டி வி ழா பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு, மக்கட்பேறு, புலவி, கலவி, ஆகிய அமைப்புகளோடு மந்திராலோசனை, தூதுவிடுத்தல், பகைமேற்செல்லல், போர்புரிதல், வெற்றி பெறுதல், சந்திபெறுதல் என்பன போன்றவை தொடர சருக்கம், இலம்பகம், பரிச்சேதகம் ஆய உட்பிரிவுடன், எண் வகைச்சுவையும், மெய்ப்பாடும் இடைஇடைய தோன்றும்படி அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கும் குறைவுபடா

மல் விரவி வரத்தொடுக்கப்படவேண்டும் எனப்புகல்கின்றன. அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கில் ஒன்று குறைவு பட்டுப்பிறசிறப்புக்கள் அமையினும் அது சிறு காப்பியமாகக்கரு தப்படும்.

முதற்காப்பியம்-சிலப்பதிகாரம்

தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி; குண்டலகேசி, வளையாபதி என்ற ஐந்துகாப்பியங்களையும் ஐம்பெரும் காப்பியங்கள் என அழைக்கும் வழக்காறு உள்ளது. இவற்றுள் காலத்தால் முந்தியது சிலப்பதிகாரமே. காப்பிய வளர்ச்சியின் முதல் நிலையை இக்காப்பியத்தில்தான் காணவேண்டும். காப்பியத்தைப்பொருள் தொடர்நிலைச்செய்யுள் என அழைத்தோம். மதுரைக்காஞ்சி என்னும் பத்துப்பாட்டுப் பாட்டும் 782 அடிகளைக்கொண்ட பொருள் தொடர்ந்து வருகின்ற செய்யுளாயிருக்க அதனைக்காப்பியம் என அழைக்கவில்லை. இவண் பொருளெனப் புலவர்கள் போற்றும் அறம், பொருள், இன்பம், வீடென்றும் நான்கையும் நவிலாது மதுரையின் சிறப்போடு காஞ்சித்திணைப் பொருளைமட்டும் கூறினமையாலும், தொடக்கமும், முடிவும் சிறப்புற அமையாமையாலும் அது காப்பியமாக்கப்படவில்லை.

சிலப்பதிகாரம் அகவற்பாவாலாய முப்பது கதைகளாலாய பெருங்காப்பியம். இதன்கண் அறமுதலாய நாற்பொருள்களும் தொடர்ந்து முடிவு பெறக்கூறப்படுவதோடன்றிப் பிற்கால இலக்கணநூல்கள் மொழிந்த பிறபண்புகளும் குறைவற வருகின்றன. உயர்ந்தகுறிக்கோள்களை உயரிய நடையில் இளங்கோவடிகள் பிழைபடாது நடுவிகவா நன்னெறி நின்று கூறிச்செல்கிருர். காப்பியத்திற்கென கொண்ட கதை, மக்கள் உள்ளம் கவர்ந்த கண்ணகி தெய்வநிலை எய்திய உயர்ந்த வரலாருயமைந்தது. பூம்புகார் மகரத்திற் பிறந்த கண்ணகியை, திருச்செங்குன்றில் தெய்வமாக்கி மேலுலகம் அனுப்பிவிட்டுப் பின்னர் வஞ்சிமாநகரில் உலக வேந்தர்கள் கோயில் நாட்டி

ஒருங்கு கூடி வழிபடுமளவு வரலாறு செல்லுகிறது. இடை இடையே கண்ணகி, மாதவி முதலியோரின் இல்லற வாழ்வு, அவர்கள் பெற்ற வாழ்வியல் இன்பம், சேரமன்னனுய செங்குட்டுவனின் பொருளியல் வாழ்வு, அவன் வாகைசூடியவரலாறு, நாட்டிற் சாந்தி நிலவ அறம் நாட்டி இயற்றிய வழிபாடு ஆயன கூறப் பட்டுள்ளன. சமண சமயப்புலவராய இளங்கோவடிகள், ஒரு சார்புபடாது பிறசமயக்கொள்கைகளையும் குறைவறக்கூறிச்செல்கிருர். சேர, சோழ, பாண்டியராய மூன்றரசுகளைப்பற்றிக் கூறுகையில்கூட ஒன்றும்குறைவுபடாமல் மொழிந்துள்ளார். உண்மைத் துறவியின்உள்ளம் வெளியாவதோடன்றி உயர்ந்தகாப்பியத்துக்கும் இலக்கியமாய்இக்காப்பியம் செல்லுகிறது. சிலப்பதிகாரத்தில் கற்பனைமிகக்குறைவு.வரலாற்றையேகவிஞர்மொழிகிருர்.சிலப்பதிகாரக்கதையைத்தொன்மைக்கு எடுத்துக்காட்டாக நச்சினுர்க்கினியர் நவில்வார். மற்றும் சிலப்பதிகாரக்கதை மக்களால் பலகாலும் பாராட்டப்பட்ட பழங்கதை என்பதற்கும் சான்றுகள் பல உள. இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டுப்பத்தினி வழிபாட்டுக் கொள்கையைச்சிலப்பதிகாரம் ஒரு முகமாய்ப்படிப்படியாய் விரைவு தோன்றகூறிச்செல்கிறது.

மணிமேகலை!—

சிலப்பதிகாரக்கதையின் தொடர்பாக மணிமேகலைகாப்பியம் எழுந்தது. சிலப்பதிகாரக்கதையினை இளங்கோவடிவுகட்குக் கூறிய சீத்தலைச்சாத்தனுர் இக்கதையின் ஆசிரியர். சிலப்பதிகாரத்திற்கும், மணிமேகலைக்கும் உள்ள வேறுபாடே காப்பியபண்பிக்கிடையேகாணப்படும் வளர்ச்சியாகும். காப்பியநடையிலேயே சிலப்பதிகாரத்துக்கும், மணிமேகலைக்கும் வேற்றுமை உண்டு பதிகமின்றி முப்பது பிரிவுகளோடு, 4826 அடிகளில் அடைகிறது காப்பியம். இக்காப்பியத்துக்கு 'மணிமேகலை துறவு' என்ற பெயரும் உண்டு. மணிமேகலை துறவு எய்திய வரலாற்றையே காப்பியம் கூறுவதால் அதற்குத்துணையாகப் பல்லிடங்களிலும் பௌத்த சமயக்கருத்துக்கள் இடையிடையே

வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரக்காப்பிய நடையைவிடச்சற்றுத்தளர்வு எய்திய நடையில் சொல்லணிகள் பலவற்றைக்கொண்டுள்ளது. பௌத்தத்தைச்சிறப்பித்துப்பிறவற்றை ஏளனப்படுத்துமளவுக்கு ஆசிரியர் சென்றுவிடுகிருர். பிற்காலக்காப்பியங்களில் மடக்கு, தொனி, சிலேடை ஆய அலங்காரங்கள் புகுதற்குத்துவக்கமாக மணிமேகலை திகழ்கிறது. பொருள் இன்பம் இரண்டையும் விடுத்து அறத்தையும் வீட்டையுமே இக் காப்பியம் புகலும். மணிமேகலையிற் பிற்கால வழக்காறுகளாய பிற்பாடு, இந்த, அந்த, அப்படி இப்படி என்பனவாய சொற்கள் பலவும், பிற்கால இலக்கண முறைகளும் கையாளப்படுகின்றன. கதைச்சிறப்பும், நடைச்சிறப்பும் சிலப்பதிகாரத்தை ஒப்ப வில்லையாயினும், அணிவகைகளைக்கையாளுதல் பிற்கால இலக்கண வளர்ச்சிக்கான வித்திடல்போன்றனவும் விஞ்சிய கற்பனைகளும் மணிமேகலையிற் காணப்படும் வளர்ச்சிப்பண்புகளாம் பௌத்தர் இயற்றிய காப்பியமாக நமக்குக் கிடைப்பது இது ஒன்றே.

சிந்தாமணி

சமணப் பெருமக்கள் இலக்கியப் படைப்பைத் தனிக்கலையாகவே பயின்றவர்கள். திருத்தக்கதேவர் இயற்றிய சிந்தாமணி தனது காப்பியத்தன்மையால் பெயர்பெற்றது என உரையாசிரியர் கூறுவர். சிந்தாமணியில் புதுமை வளர்ச்சிகள்பலவற்றைக்காண்கிரேம். சிந்தாமணியின் கதை வடமொழியின் தழுவல் என்பதோடு மட்டுமின்றித் தமிழர் மனப்பாங்குக்கு ஒவ்வாத அளவில் ஒருவன் எட்டுப் பெண்டிரை மணப்பதாகவும் வருவது. எனவே கதைப் போக்கில் விருவிருப்பு அமையவில்லையெனினும் காவிய அமைப்பால் புதுமைகளைக் காண்கிரேம். சிலம்பும், மேகலையும் ஆசிரியத்தால் ஆகிநிற்க, விருத்தப்பாவில் எழுந்தது சிந்தாமணி. பாவினங்களின் வளர்ச்சிக்கு வித்தூன்றிய முதல்காப்பியம் சீவகசிந்தாமணியே. இரண்டாவதாகச் செய்யுளில் ஓசையினமைதியையும்,

சொல்லளவில் பொருளொடு ஓசையியல்பையும் முதலில் சிந்தாமணியில்தான் காண்கிறோம். கம்பநாடர் தேவரிடமிருந்துதான் இப்பண்புகளைக் கொண்டுள்ளார் என்பர்.

"வீணையும் குழலும் பாலும் அமுதமும் கரும்பும் தேனும்
பாணியாழ் கனியும் வென்ற பைங்கிளி மழலைத்
தீஞ்சொல்".

என்பனபோன்ற சொல்லினிமைகள் மிகுதியும் வருவன. சிந்தாமணியின் சொல்லழகைப் பல மேலைநாட்டறிஞர் புகழ்ந்துள்ளனர். சிந்தாமணியில் வருகின்ற இலம்பகங்கள் என்னும் பிரிவுகளுள் சில சிறப்பற்றும் இருப்பதுண்டு. எனினும் அவை தனித்தனிப் பாடல்களின் இனிமையினால் சிறப்புள்ளனவாகின்றன. நான்காவதாக தனித்தனிக் காட்சிகளை அல்லது கட்டங்களைமட்டும் மிகச் சிறப்பாக வருணித்துள்ள முறையும் குறிப்பிடத் தக்கது. தேவர் தனது சமண சமயக் கருத்துக்களை வருணனைகளின் வழியாக வெகு திறமையாக இலைமறை காய்ப்பில் வெளியிடுகிறார். கதைப்போக்கிலும் அமைப்பிலும் உள்ள பல குறைபாடுகளுக்கிடையே தேவர் அவர்களின் திறமையால் சீவகசிந்தாமணி சிறப்பெய்தியுள்ளது.

குண்டலகேசி:—

குண்டலகேசிஎன்னும் பௌத்தகாப்பியத்தைநாதகுப்தனார் என்பவர் இயற்றியுள்ளார். அதில் சில பாடல்களும், அதன்பகுதிகளும் தான் நமக்குக்கிடைக்கின்றனவே யன்றி முழுநூல்கிடைக்கவில்லை. குண்டலகேசியை 'அகலகவி' என்பர். அகலகவி என்றால் கதைமுதலாகியசெய்யுளும், இயலிசை நாடகங்களோடும், கலைநூல்களோடும் பொருந்தப் பாடும் பெருங் கவியாகும். குண்டலகேசி

யும் இயலிசை நாடகங்களோடும், கலை நூல்களோடும் பொருந்தப் பாடப்பட்ட ஒரு கதைப் பாட்டென அறிஞர் கொண்டனர். அகலக வியால் காப்பியம் ஆனமைக்கு இது ஒரு காட்டாகும். இதில் வரும் பாடல்கள் ''நான்கடியும், எதுகையும், வழிமொழியும், பொருட் பொலிவும் நயன் ஒப்ப முடிந்தமையால், இன்பம் என்னும் உயிரலங்காரமாய் நின்றது'' என வீரசோழிய உரைகாரர் கூறுவார். குண்டலகேசியில் கலித்துறைபயின்று வந்துள்ளது. இந்நூலுக்குக்குண்டலகேசி விருத்தம் என்ற பெயருமுண்டு இந்நூலில்உள்ள ஒவ்வொரு செய்யுளும் காதை என்னும் பெயரால் வழங்கப்பட்டது என்பது நீலகேசி உரையால் தெரியவருகின்றது. இதில், தெரியாத சொல்லும் பொருளும் இடையினிடையே வருவதாகச்சொல்வர். சிந்தாமணியையடுத்து அகலக்கவிநிலை, கலித்துறையாப்பு, இன்பம் என்னும் அலங்காரம் பயிறல், ஒவ்வொரு செய்யுளையும் காதையென அழைத்தல், தெரியாத சொல்லும் பொருளும். விரவல்போன்ற வளர்ச்சி நிலைகளைக்குண்டலகேசியின்கண் காண்கிறோம். குண்டலகேசி என்ற வைசியப்பெண் தன்னைக்கொல்ல எண்ணிய கணவனைக்கொன்றுவிட்டுப் பௌத்த சமயத்துறவியாகிப் பிறசமயத்தவரை வாதில் வென்ற கதையே காப்பியப்பொருள். இது ஒரு தருக்க நூல்.

வளையாபதி:

ஐம்பெருங்காப்பியங்களுள் ஐந்தாவதான வளையாபதி சமணசமய நூல். இந்நூலின் 66 பாடல்களே கிடைக்கின்றன. இதன்கவிதைகள் கவிதையழகு மிக்கன வென்று தக்கயாகப்பரணி உரைகாரர் கூறுவார். இந்நூலாசிரியர் திருக்குறளை அப்படியே எடுத்துக்கையாண்டுள்ளார். இதுவும் குண்டலகேசி போன்று தருக்கநூல் வகையிற் சேர்ந்ததே.

ஐஞ்சிறு காப்பியங்கள்:

நீலகேசி. தோலாமொழித்தேவர் இயற்றிய நீலகேசி

என்ற சமண காப்பியம் குண்டலகேசிக்கு எதிர்ப்பாகத்தோன்றிய நூல். இதனை 'நீலகேசித்தெருட்டு' என அழைப்பதும் உண்டு இக்காப்பியத்தில் நகைச்சுவைப்பகுதிகள் மிகுதியாக இருக்கும் என்று பேராசிரியர் வையாபுரிபிள்ளை அவர்கள் மொழிவார்கள். தக்க இலக்கியச் சுவையும், காவிய அமைப்பும் இதில் இல்லையா யினும் இவ்வாசிரியர் தொல்காப்பியம், நாலடியார், குறள் போன்ற பாடல்களையும் பழமொழிகளையும் கையாள்கிறார். இதிற் காணும் தருக்கமும் கூட சிறப்புக்குரிய முறையில் அமையாது இகழ்வு, நகை, பழிப்பு ஆயனவாகத்திகழ்கிறது. 'ஏல்'போன்ற பிற்கால வழக்குகள் உள. இதன் பாடல்களையும் காதை என்றே உரைகாரர் அழைக்கிறார். எழுத்தெண்ணிப் பாடலியற்றிய முறை யும் நீலகேசியிற்காணும் வளர்ச்சி முறை. இதுவும் விருத்தயாப் பினால் ஆனதே. முனிச்சந்திரன் என்ற சமணமுனிவனின் முன் னர் பழையநூர் நீலகேசி என்னும் பேய் நின்று அழகான அரச குமரி உருவம் கொண்டு மயக்க முயல்கிறது. அதனை அறிந்த முனிவன் அப்பேயினை நல்வழிப்படுத்துவதே காப்பியத்தின் கதை இவண் நீலகேசியில் காப்பிய பண்பில் தாழ்வையே காண்கிறோம் எனினும் நகைச்சுவை நவிறல், எழுத்தெண்ணிப் பாடல் இயற் றிய பாவிதம் பேன்றன புகுந்துள.

சூளாமணி:

தோலா மொழித்தேவர் இயற்றிய 'சூளாமணி' இனிய தமிழ்ச்சுவை தோன்ற இயற்றப்பட்ட ஒரு காப்பியம். கதைப்பொ ருளிலும் கதையமைப்பிலும், செய்யுள் இனிமையிலும், சொல்ல ழகு இனிமை முதலியவற்றிலும் இக்காப்பியம் சிந்தாமணியை வென்று விடுகிறது.

(தொடரும்)

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ	ப
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக் கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப் பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பக மூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினா விடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக் கட்டளை	—	0	3	0
32.	மனீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6
42.	அகராதி நிகண்டு	—	0	12
43.	மேகவிடு தூது	—	0	2
44.	திருக்குற்றாலமாலை	—	0	2
45.	தண்டலையார் சதகம்	—	0	4
46.	இராமோதந்தம்	—	0	3
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6
49.	கூடற்பராணம்	—	0	10
50.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6
51.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4
52.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12
53.	பாப்பாவினம்	—	0	10
54.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5
55.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3
56.	கடம்பர் கோயில் உலா	—	0	6
57.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6
58.	கலைசைக்கோவை	—	0	12
59.	பெருந்தொகை	—	5	0
60.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5
61.	சிராமலைக்கோவை	—	0	12
62.	மத்யவியாயோகம்	—	0	2
63.	அமிர்தரஞ்ஜநி	—	0	2
64.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8
65.	திருச்சிறுபுலியூருலா	—	0	12
66.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10
67.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் ''செந்தமிழ்'' இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4 - 50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 59 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6. 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.